செ.வெ.எண்: 03/செப்டம்பர் நாள்: 03.09.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## பள்ளிக் கட்டணம் தொடர்பான புகார்களை மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணையின்படி, பள்ளிகளுக்கான ஆண்டு கட்டணத்தை 100 சதவீதம் முழுமையாக செலுத்த கட்டாயப்படுத்தும் பள்ளிகள் குறித்து பொதுமக்களிடமிருந்து வாய்மொழியாகவோ எழுத்து மூலமாக பெறப்படும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மாண்பமை நீதிமன்ற ஆணையை மீறி 100 சதவீத கட்டணத்தை செலுத்த கட்டாயப்படுத்தும் பள்ளிகள் தொடர்பான புகார்களை தெரிவிக்க rmdfeescomplaints@gmail.com என்ற மின்னஞ்சல் செயல்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் பள்ளிக் கட்டணம் தொடர்பான புகார்களை மேற்குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரியில் தெரிவிக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**